*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*04 07 2026 SATURDAY 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

***தலைப்புச் செய்திகள்***

***1.*** *மேற்காசிய சூழலால் ஏற்பட்ட எரிசக்தி நெருக்கடிக்கு, முறையாக திட்டமிட்டு இந்தியா தீர்வு கண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

***2.*** *நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இம்மாதம் 20ஆம் தேதி தொடங்குகிறது.*

***3.*** *மேம்படுத்தப்பட்ட உடான் திட்டத்தின் மூலம் உள்நாட்டுப் போக்குவரத்தில் புதிய அத்தியாயம் தொடங்கியிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.*

***4.*** *ஐ.நா அமைதிப் படையில் சிறப்பாக பணியாற்றிய 651 இந்திய ராணுவ வீரர்களுக்கு விருது வழங்கப்பட்டது.*

***5.*** *போர்ச்சுக்கல் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே - வைஷ்ணவி அட்கர் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*மேற்காசிய சூழலால் ஏற்பட்ட எரிசக்தி நெருக்கடிக்கு, முறையாக திட்டமிட்டு இந்தியா தீர்வு கண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலம், Pachpadra-வில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய அவர், 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய எரிசக்தி நெருக்கடியாக மேற்காசிய சூழல் அமைந்ததாக குறிப்பிட்டார்.*

*உலகின் பல நாடுகள் இந்த கடுமையான சவாலை எதிர்கொள்ள முடியாமல் திணறியதாக அவர் குறிப்பிட்டார்.*

*குறித்த காலத்தில் இந்தியா சரியான முடிவுகளை எடுத்து தடையற்ற பெட்ரோலிய பொருட்கள் விநியோகத்தை உறுதி செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.*

*எந்தவொரு நெருக்கடியான சூழல் எழுவதற்கு முன்பும், முன்கூட்டியே திட்டமிட்டு சவால்களை சமாளித்ததாகவும் அவர் கூறினார்.*

*மேற்காசிய நெருக்கடி சூழலுக்கு முன்பு 26 நாடுகளிலிருந்து பெட்ரோலியப் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்து வந்ததாகவும், போர்ச் சூழல் ஏற்பட்ட பின்பு, 40க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்து, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.*

*நாட்டு நலனையும், மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு, தமது அரசு திட்டங்களை வகுத்ததாகவும் பிரதமர் கூறினார்.*

*நாட்டின் எண்ணெய் சுத்திகரிப்பு திறனை கணிசமான அளவில் உயர்த்தியுள்ளதாக தெரிவித்த அவர், உலகின் நான்காவது பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நாடாக இந்தியா விளங்குவதாகவும் குறிப்பிட்டார்.*

*எரிபொருள் நெருக்கடி ஏற்பட்ட காலத்தில், அரசுக்கு ஒத்துழைப்பு நல்கிய மக்களுக்கு தமது நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறினார்.*

*நெருக்கடியான காலகட்டத்தில் மத்திய அரசுக்கு எதிராக, தவறான தகவல்களை பரப்பி, சிலர் அரசியல் செய்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.*

*வளைகுடா நாடுகள் மற்றும் யுக்ரைனில் ஏற்பட்ட சண்டை காரணமாக, உலகில் யூரியா உர பற்றாக்குறை ஏற்பட்டதாக கூறிய அவர், பல நாடுகளில் ஒரு மூட்டை 3 ஆயிரம் ரூபாய் வரை யூரியா விற்கப்பட்டதாக கூறினார்.*

ஆனால் இந்தியாவை பொறுத்தமட்டில், விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு, ஒரு மூட்டை *300* ரூபாய்க்கே யூரியா வழங்கப்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

ராஜஸ்தான் பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று மாலை குஜராத் சென்ற பிரதமர், *Sanand*-ல் *7* ஆயிரத்து *500* கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள செமி கண்டக்டர் உற்பத்திக் கூடம் மற்றும் ஆய்வகத்தை திறந்து வைத்தார்.

>>>>><<<<<

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இம்மாதம் *20*ஆம் தேதி முதல் அடுத்த மாதம் *13*ஆம் தேதிவரை நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்களும், முடிவுகளும் எடுக்கப்படும் என்றும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளிக்கும் என்றும் கூறினார்.

>>>>><<<<<

மேம்படுத்தப்பட்ட உடான் திட்டத்தின் மூலம் உள்நாட்டுப் போக்குவரத்தில் புதிய அத்தியாயம் தொடங்கியிருப்பதாக சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், *28* ஆயிரத்து *840* கோடி ரூபாய் செலவில் பிரதமர் திரு. நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்த திட்டம், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட நகரங்களுக்கும் விமான சேவை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ், *100* சிறிய விமான நிலையங்கள் மற்றும் *200* ஹெலிகாப்டர் தளங்கள் அமைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

ஏழை எளிய நடுத்தர மக்கள் மக்கள் குறைந்த செலவில் விமான சேவையை பெறுவதற்கு மேம்படுத்தப்பட்ட உடான் திட்டம் வழிவகுத்துள்ளதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

>>>>><<<<<

கல்லீரல் மற்றும் நீரிழிவு தொடர்பான நோய்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் அதிக அளவில் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று கல்லீரல் நோய் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய அவர், *Type-II* நீரிழிவு நோய் மற்றும் கல்லீரல் நோயால் பாதிக்கப்படுவோரின் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கவலை அளிப்பதாக கூறினார்.

உடல் பருமனால் நீரிழிவு, கல்லீரல் பெருக்கம் மற்றும் இதய நோய்கள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

நோய்களை கட்டுப்படுத்த அறிவியல் வளர்ச்சி மட்டும் போதாது என்றும், நோய் வராமல் தடுப்பது குறித்த விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

விஞ்ஞானப்பூர்வமான தொடர் ஆய்வுகளுக்குப் பிறகே எத்தனால் கலந்த எரிபொருள் பயன்படுத்தும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொழில் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தனியார் பொறியியல் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் திருமதி. வர்த்திகா சுக்லா, கடந்த *2015*ஆம் ஆண்டு முதலே எத்தனாலை எரிபொருளாக பயன்படுத்துவது குறித்து பொதுமக்களிடம் மத்திய அரசு கருத்துக்களை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

வாகன உற்பத்தி நிறுவனங்களிலும் இதுதொடர்பான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் திருமதி. வர்த்திகா சுக்லா கூறினார்.

*>>>>><<<<<*

*ஐ.நா அமைதிப் படையில் சிறப்பாக பணியாற்றிய 651 இந்திய ராணுவ வீரர்களுக்கு விருது வழங்கப்பட்டது.*

*காங்கோ நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய வீரர்களின் தொழில்சார்ந்த பயிற்சி, சிறப்பான செயல்பாடு, அர்ப்பணிப்புமிக்க சேவை ஆகியவற்றுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*231 கோடி ரூபாய் வங்கி மோசடி தொடர்பான வழக்கில், மஹாராஷ்ட்ரா மற்றும் குஜராத் மாநிலங்களில் சிபிஐ இன்று சோதனை நடத்தியது.*

*பாரத ஸ்டேட் வங்கி மற்றும் கனரா வங்கி அளித்த புகார்களின் அடிப்படையில், தனியார் நிறுவனங்கள் தொடர்புடைய இடங்களில் இந்த சோதனை நடத்தப்பட்டது.*

*>>>>><<<<<*

*ஈரான் நாட்டின் முன்னாள் உயர் தலைவர்* **Ayatollah Seyyed Ali Khamenei-***யின் இறுதிச் சடங்குகள், அந்நாட்டு தலைநகர் டெஹ்ரானில் இன்று தொடங்கியது.*

*ஆறு நாட்கள் நடைபெறும் இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி, மறைந்த தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்தி வருகின்றனர்.*

*பொதுமக்களின் பார்வைக்காக அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.*

*அவரது ஆன்ம இளைப்பாற்றலுக்கான பிரார்த்தனைகளும் நடைபெற்று வருகின்றன.*

*ஈரானின் மூத்த அரசியல் தலைவர்கள், ராணுவ அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள்* **Ayatollah Seyyed Ali Khamenei-***க்கு இறுதி மரியாதை செலுத்தி வருகின்றனர்.*

*பீகார் ஆளுநர் திரு.* **Syed Ata Hasnain,** *வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு.* **Pabitra Margherita** *ஆகியோர் இந்தியா சார்பில் இறுதி மரியாதை செலுத்தினர்.*

*ரஷ்ய முன்னாள் அதிபர் திரு. Dmitry Medvedev, சீனாவின் பிரதிநிதி He Wei, ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் Amir Khan Muttaqi உள்ளிட்டோரும்* **Ayatollah Seyyed Ali Khamenei-***க்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*>>>>><<<<<*

*ரஷ்யாவின் St. Petersburg நகரில் உள்ள எண்ணெய்க் கிடங்கில் யுக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.*

*இதனை உறுதி செய்துள்ள ரஷ்ய அதிகாரிகள், யுக்ரைன் அனுப்பிய ஏராளமான ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.*

*இதுகுறித்து தெரிவித்துள்ள St. Petersburg கவர்னர் திரு. அலெக்சாண்டர் Beglov, பால்டிக் கடல் பகுதியில் அமைந்துள்ள Kirovsky மாவட்டத்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.*

*அதனை தடுக்கும் வகையில் ரஷ்ய வான்வழி பாதுகாப்பு படையினர் நடத்திய பதில் தாக்குதலில், யுக்ரைனின் 72 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*இந்த தாக்குதல் குறித்து தெரிவித்துள்ள யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி, தங்கள் நாட்டின் மீது ரஷ்யா விதித்துள்ள நீண்டகால தடைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளார்.*

*ரஷ்யாவின் பல்வேறு இலக்குகளை குறி வைத்து இந்த தாக்குதலை யுக்ரைன் ராணுவம் நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே - வைஷ்ணவி அட்கர் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 2-6, 10-2 என்ற செட்கணக்கில் Lithuania-வின் Iveta Dapkute - கஜகஸ்தானின் Sonja Zhiyenbayeva இணையை வென்றது.*

*>>>>><<<<<*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின் Hiroko Kuwata இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 2-6, 10-6 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Olivia Lincer - ரஷ்யாவின் Ekaterina இணையை வென்றது.*

*>>>>><<<<<*

*ஆசிய ஜூனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் ஒற்றையர் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் இந்தியா கைப்பற்றியுள்ளது.*

*இப்போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>><<<<<*

*இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*ஹம்பன்தோட்டாவில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிறகு 320 ரன் எடுத்தது.*

*321 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய இந்தியா, 49 புள்ளி 2 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 324 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*>>>>>END<<<<<*